இப்பொழுது மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக மாற்றப்பட்டிருக்கிற காரணத்தினால்தான் வேறு இடத்திலே அந்த 25 படுக்கைகள் அமைக்க வேண்டுமென்ற ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அங்கே வருகிற பொதுமக்களுக்கு அது அவசியமா என்பதுபற்றி ஆய்வு செய்து தனியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 படுக்கைகள் கொண்ட அந்த சித்தா பிரிவை எனது தொகுதிக்குச் கொடுத்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்காக தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் மருத்துவக் கல்லூரி சேலத்தில் வந்ததால் அதற்கு அடுத்த தலைமை மருத்துவமனை அடுத்த நகரமான நாமக்கல்லுக்குத்தான் வர வேண்டும். அதனுடைய...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத் தனிக் கேள்வி போடவும். இது சேலம் நகரில் சித்தா மருத்துவமனை ஏற்படுத்துவது பற்றிய கேள்வி.

வினா எண் 325, டாக்டர் க. கோபால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

325—

வண்டாம்பாளையில் அரசு சுகாதார நிலையம் அமைத்தல்.

*** 15670 டாக்டர் க. கோபால்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், வண்டாம்பாளையில் அரசு சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.
(ஆ) கேள்வி எழாது.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான நன்னிலம் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருப்பதனால் நமது மாண்புமிகு டாக்டர்

1993 ஏப்ரல் 13]

புரட்சித் தலைவி அவர்களால் பனங்குடி கிராமத்தில் மத்திய அரசின் ஆதரவுத் திட்டத்தின்கீழ் ஒரு வளர்ச்சி மையம் அமைப்பதற்கும், அதேபோல உத்தமசோழபுரத்தில் 100 கோடி ரூபாயில் ஒரு காஸ்டிக் சோடா...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் வேண்டாம். வேறு நேரத்தில் நீங்கள் நன்றி தெரிவிக்க வேண்டும். இது சம்பந்தமானதாய் இருந்தால் நன்றி தெரிவியுங்கள்.

டாக்டர் க. கோபால்: தொழிற்சாலை அமைப்பதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வண்டாம்பாளை கிராமமானது எனது தொகுதியில் உள்ளிட்ட அந்த 3 ஒன்றியத்தையும் அதாவது திருமருகல், நன்னிலம், கொரடாச்சேரி பகுதிகளை இணைக்கின்ற ஒரு மையப் பகுதியாகவும், இந்தப் பகுதியில் அதிகமான ஏழையெளிய மக்கள் வசிக்கின்ற காரணத்தினாலும் அவர்கள் மருத்துவமனைக்கு மருத்துவ உதவிகளைப் பெறுவதற்கு தூரத்தில் உள்ள திருவாரூருக்கோ அல்லது நன்னிலத்திற்கோ செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை இருப்பதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டில் இல்லையென்றாலும்கூட வருகின்ற நிதியாண்டிலாவது மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மொத்த மக்கட்தொகை 96,680 என்று கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. நியாயப்படிப் பார்த்தால் அங்கே 3 தான் இருந்திருக்க வேண்டும். 30 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என்று பார்த்தால் 3 தான் இருந்திருக்க வேண்டும். இப்பொழுதே 4 இருக்கிறது. எனவே, அதன் காரணத்தினால் இப்பொழுது நாம் கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறோம். எனவே, ஒரு ஒன்றியத்தை யூனிட்டாக வைத்து அங்கே இருக்கிற ஜனத்தொகை அடிப்படையிலேதான் ஆரம்பச் சுகாதார நிலையங்களை அமைக்கிறோம். எனவே, போதிய அளவுக்கு இருக்கிறது என்று அரசாங்கம் கருதுகிற காரணத்தினால்தான் அங்கே கொடுக்கமுடியாது என்று சொல்லியிருக்கிறோம்.

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க முடியாவிட்டாலும்கூட ஒரு சித்தா மருத்துவமனையாவது அமைக்க வாய்ப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

[1993 ஏப்ரல் 13

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தா மருத்துவமனை ஆரம்பச் சுகாதார நிலையத்தோடு இணைந்து இருக்கவேண்டுமேயொழிய தனித்தனியாக அமைப்பது என்பது கடினம். எனவே ஆரம்பச் சுகாதார நிலையத்தோடோ அல்லது தாலுக்கா மருத்துவமனையோடோதான் இதையும் இணைத்து வைக்கமுடியும். எனவே, தனியாக வைப்பது கடினம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 326, திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

326—

சித்தர்க்காடு நவீன அரிசி ஆலை.

16784* **திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி சித்தர்க்காடு நவீன அரிசி ஆலையினால் சுற்றுப்புறத் தூய்மை கெடுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பொதுமக்கள் நலன் கருதி சுற்றுப்புறத் தூய்மை பாதுகாக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) சித்தர்க்காட்டில் அமைந்துள்ள நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்த நவீன அரிசி ஆலையில் தூசு வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்த தூசு பிரிப்பான்கள் பொருத்தப்பட்டுள்ளன. செயல்முறைக் கழிவு நீரினை சுத்திகரிக்க கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும், காற்று மாசு தடுப்புச் சாதனங்களை சரியான முறையில் இயக்கவும் இந்தத் தொழிற்சாலை நிர்வாகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் முனைப்பாகக் கண்காணித்து வருகின்றது.

முற்பகல் 10-20

திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள சித்தர்க்காடு நவீன அரிசி ஆலையிலிருந்து வரும் புகையில் உமி கருப்பாக மாறி அந்தத் தூசி